# முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம்,
# அருப்புக்கோட்டை

## அசல் வழக்கு எண்.283/2015

வா.சா.1– குறுக்கு விசாரணை தொடர்ச்சி – நாள் 27–10–2025.

பெயர் = சுந்தரராஜ் வா.சா.–1

வா.சா.–1 நீதிமன்றத்தில் மீண்டும் ஆஜராகி சத்திய பிரமாணம் செய்யப்பட்டு வாதி தரப்பில் கு.வி. தொடர்ச்சி –

(1) பிரதிவாதிகள் உறவின்முறை நடத்திய 20.04.2015ம் தேதிய கூட்டத்தில் நான் 15வது நபராக கையெழுத்து செய்துள்ளேன் என்றால் ஞாபகமில்லை. அந்த கூட்டத்தின் தீர்மானத்தின்படி 1ம் வாதி சீனிவாசன் என்பவரை மண்டபம் கட்டும் திருப்பணியில் ஒரு உறுப்பினராக தேர்ந்தெடுக்கபட்டார் என்றால் தெரியாது. வசந்தா என்பவர் எனக்கு என்ன உறவு முறை என்றால் கொளுந்தியா. 1ம் வாதியின் மருமகள் என்றால் சரிதான். வசந்தா வீட்டின் தெற்கே இருக்கும் கந்தசாமி எனக்கு மாமனார் அவருடைய மகளைத்தான் நான் கட்டியுள்ளேன். கந்தசாமி போட்ட வழக்கு இந்நீதிமன்றத்தில் தோல்வியடைந்துவிட்டது என்றால் அதுபற்றி எனக்குத் தெரியாது. 1,2 பிரதிவாதிகள் உறவின்முறையை சேர்ந்தவர்கள் இந்த நீதிமன்றத்தில் மூன்று வழக்கு தாக்கல் செய்துள்ளார்கள் என்றால் எனக்கு ஞாபகமில்லை. அந்த வழக்குகள் எல்லாம் தோல்வியடைந்துவிட்டது. வசந்தா வழக்கு மட்டும்தான் நிலுவையில் உள்ளது என்றால் தெரியாது. ஏற்கனவே தாக்கல் செய்யப்பட்ட வழக்குகளில் பிறப்பிக்கப்பட்ட நீதிமன்ற தீர்ப்புகளில் 1,2 பிரதிவாதிகளின் உறவின்முறைக்கு பாத்தியமான இடம் கிழமேல் 135 அடி என சொல்லப்பட்டது என்றால் சரிதான்.

(2) வா.சா.ஆ.4 அடமானபத்திரம் தாக்கல் செய்துள்ளேன் என்றால் நான் போடவில்லை என சாட்சி கூறுகிறார். அடமானப்பத்திரத்தில் சொல்லப்பட்டுள்ள சொத்துவிவரம் எனக்குத் தெரியுமா என்றால் மண்டபத்திற்கு பாத்தியப்பட்ட சொத்து என்பதால் தாக்கல் செய்துள்ளேன் என சாட்சி கூறுகிறார். வா.சா.ஆ.4 ல் உள்ள சொத்து கிழமேல் தென்வடல் எத்தனை அடி என தெரியுமா என்றால் தெரியாது. நான்குமால் விவரம் தெரியுமா என்றால் தெரியும். ஓடைக்கும் பாதைக்கும் தெற்கு, வசந்தா கந்தசாமி இடத்திற்கும் மேற்கு, டிஎஸ் அழகர்சாமி இடத்திற்கும் வடக்கு, 1,2 பிரதிவாதிகள் இடத்திற்கும் கிழக்கு என சாட்சி கூறுகிறார்.

வா.சா.ஆ.4 ல் உள்ள சொத்து உறவின்முறை இடத்திற்கு கிழக்கே உள்ளது என்றால் சரிதான். வா.சா.ஆ.5 ல் உள்ள சொத்து உறவின்முறை சொத்திற்கு கிழக்கே உள்ள சொத்து என்றால் சரிதான். உறவின்முறைக்கு பாத்தியப்பட்ட கிழமேல் 135 அடி சொத்திற்கு கிழக்கே உள்ள சொத்து என்றால் சரிதான். வா.சா.ஆ.5 ல் உள்ள 3 வது லக்கச்சொத்தை படித்துக்காண்பித்தபோது லிங்காபுரம் 12 வது வார்டு குடியிருப்பு பகுதியில் இருப்பதாக சாட்சி கூறுகிறார். அந்த சொத்திற்கும் தாவாச்சொத்திற்கும் சம்பந்தமில்லை என்றால் சரிதான்.

(3) வா.சா.ஆ.6 வசந்தா என்பவரின் மாமனார் பெயரில் உள்ள பட்டா சீனிவாசன் என்பவருக்கு 10 ஏக்கர் உள்ளது என சாட்சி கூறுகிறார். வா.சா.ஆ.6 ல் பட்டாவிற்கு சாகுபடி அடங்கல் கணக்கு தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. வா.சா.ஆ.7 என் பெயரில் உள்ள பட்டா என்றால் சரிதான். என் பெயரில் 4.1/2 ஏக்கர் உள்ளது. 4.1/2 ஏக்கரில் விவசாயம் செய்து வருவதற்கு சாகுபடி அடங்கல் கணக்கு தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. 1 ம் வாதியும், நானும் விவசாயம் எதுவும் செய்துவரவில்லை என்றால் சரியல்ல. வசந்தா என்பவர் தாக்கல் செய்த வழக்கின் ஆணையர் அறிக்கை மற்றும் வரைபடத்தில் வா.சா.ஆ.8 ஆக தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். அதனை எனக்கு யார் எடுத்துக்கொடுத்தார் என்றால் வசந்தாதான் எடுத்துக்கொடுத்தார். வா.சா.ஆ.8 ல் வசந்தா வீட்டிற்கும், 1,2 பிரதிவாதிகளின் வீட்டிற்கும் இடத்திற்கும் இடையில் கம்பி வேலி போடப்பட்டுள்ளதாக காண்பிக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். கம்பி வேலி எப்போது போட்டார்கள் என்றால் பிரச்னை வரும்போது போட்டதாக சாட்சி கூறுகிறார். நான்குதிசையிலும் கம்பி வேலி போட்டுள்ளார்கள் என்றால் சரியல்ல. வடக்கு, மேற்கே போடவில்லை. கிழக்கே தெற்கே போடப்பட்டுள்ளது.

(4) வா.சா.ஆ.8 ல் வடக்கேயும், மேற்கேயும் கம்பி வேலி போடப்பட்டுள்ளதாக காண்பிக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். வசந்தா வழக்கு நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ளது என்றால் சரிதான். வா.சா.ஆ.8 பற்றிய விவரம் வசந்தாவிற்குதான் தெரியும் எனக்குத் தெரியாது என்றால் சரிதான். வசந்தாவை சாட்சியாக விசாரித்தீர்களா என்றால் ஆமாம். நான் எப்போது வழக்கு தாக்கல் செய்தேன் என்றால் 2015 ல் வழக்கு போட்டோம். நாங்கள் வழக்கு தாக்கல் செய்யும்போது வசந்தா வீட்டை ஒட்டி ஆஸ்பெஸ்டாஸ் சீட் போட்டு 1,2 பிரதிவாதிகள் செட் போட்டிருந்தார்கள் என்றால் சரிதான். ஆழ்துளைக்கிணறு

அமைத்திருந்தார்கள் என்றால் சரிதான். வழக்கு தாக்கல் செய்வதற்கு ஒரு வருடத்திற்கு முன்பாகவே மேற்படி ஆஸ்பெஸ்டாஸ் போட்ட செட்டும், ஆழ்துளைக்கிணறும் அமைத்திருந்தார்கள் என்றால் சரியல்ல. வழக்கு நடந்துகொண்டிருக்கும்போதுதான் போட்டார்கள் என சாட்சி கூறுகிறார். நான் பொய்யாக சொல்கிறேன் வழக்கு போடுவதற்கு முன்பாகவே போடப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. வா.சா.ஆ.10 பற்றி வசந்தாவிடம்தான் கேட்கவேண்டும் என சாட்சி கூறுகிறார்.

(5) வா.சா.ஆ.10 ல் நான்குமால் லிங்காபுரம் கிராமகளத்திற்கும் கிழக்கு என நான்குமால் தவறாக காண்பிக்கப்பட்டுள்ளது காலியிடம் எனதான் காண்பிக்கப்பட்டிருக்கவேண்டும் என்றால் சரியல்ல. வா.சா.ஆ.10 ல் அடியளவுகளும் கூடுதலாக காண்பிக்கப்பட்டுள்ளன என்றால் சரியல்ல. வசந்தா பெயரில் பட்டா மாறுதல் உத்தரவு எப்போது வாங்கப்பட்டது என்றால் ஞாபமில்லை. வா.சா.ஆ.11 பற்றி வசந்தாவிடம் தான் கேட்கவேண்டும் என்றால் சரிதான். தாவா சொத்தைப் பொறுத்து களமாக உபயோகிக்க உரிமை உள்ளது என பரிகாரம் எதுவும் நான் இவ்வழக்கில் கேட்கவில்லை என்றால் சரியல்ல. தாவாச்சொத்தில் பிரதிவாதிகள் கட்டியுள்ள மண்டபத்தை இடிக்க வேண்டுமென பரிகாரம் கேட்கவில்லை என்றால் சரிதான். களம் வேண்டுமென சாட்சி கூறுகிறார். வழக்கிற்கு பிற்பாடு தாவாச்சொத்தில் 1,2 பிரதிவாதிகள் கட்டிடம் கட்டியுள்ளதாக பொய்யாக சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. கட்டிடத்தில் மின் இணைப்பு உள்ளது என்றால் சரிதான். மின் இணைப்பு உள்ளதால் அதனைக் கொடுக்ககூடாது என நாங்கள் கேட்டுள்ள பரிகாரம் தவறு என்றால் சரியல்ல. எந்தவகையில் பார்த்தாலும் எங்கள் பிராது சட்டப்படி செல்லாது என்றால் சரியல்ல.

மறுவிசாரணை இல்லை.

ANANTHAVALLI S Digitally signed by ANANTHAVALLI S